**மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை –10 அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை: மரு.ஜெ.சங்குமணி, எம்.டி.,**

**ந.க.எண்:65862/நி2/4/2022** **நாள்:19.03.2024**

பொருள் : நிருவாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.பொ.கிரிதரன் தா/பெ.(லேட்) திருமதி.கே.கிருஷ்ண ஜெயந்தி, இளநிலை உதவியாளர், அரசு தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி, தூத்துக்குடி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை)எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020.
2. அரசாணை (நிலை)எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.02.2020.
3. அரசு கடித எண்:8775/ஏடி2/2020–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2020.
4. அரசாணை (3ப) எண்:14. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:06.10.2020.
5. இவ்வியக்கக பணி ஒதுக்கீட்டு ஆணை ந.க.எண்:37662/நி2/4/2019, நாள்:08.09.2021.
6. முதல்வர், அரசு தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி, தூத்துக்குடி அவர்களின் பணி நியமன செயல்முறை ஆணை எண்:705/நி4/2017, நாள்:22.09.2021.
7. முதல்வர், அரசு தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி, தூத்துக்குடி அவர்களின் கடித ந.க.எண்:705/நி4/2017, நாள்:19.07.2022, 12.04.2023 மற்றும் 03.11.2023.
8. அரசு கடித எண்:3736941/ஏடி2/2022–1, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (ஏடி2)துறை, நாள்:18.01.2023.
9. அரசாணை (நிலை) எண்:33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ.1) துறை, நாள்:08.03.2023 மற்றும் இதர தொடர்புடைய ஆணைகள்.

*****

**ஆணை:**

தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் (Junior Assistant) பணிபுரிந்து கொண்டிருந்த திருமதி.கே.கிருஷ்ண ஜெயந்தி அவர்கள் 02.02.2010 அன்று பணியிடை இறந்துள்ளார். அவரின் பிறந்த தேதி 17.07.1961 ஆகும். அவரின் உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.07.2021 ஆகும். இவரின் தற்காலிக பணியானது

அரசாணை(நிலை)எண்:218, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:09.09.2016-ன் மூலம் வரன்முறை படுத்தப்பட்டுள்ளது. மேற்படி அரசு ஊழியர் இறந்ததைத் தொடர்ந்து, அவரின் மகனும் வாரிசுதாரருமான திரு.பொ.கிரிதரன் என்பவர் தனது 31.07.2010, 15.02.2017, 19.07.2017 மற்றும் 15.12.2017 நாளிட்ட கடிதங்களில், தனக்கு கருணை அடிப்படையில் பணி கோரி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தார்.

2) இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.பொ.கிரிதரன் அவர்கள் அவர்கள் முதல் முறையாக தனக்கு கருணை அடிப்படையில் பணி கோரிய நாளான 31.07.2010 அன்று, இறந்த அரசு ஊழியர் திருமதி.கே.கிருஷ்ண ஜெயந்தி அவர்களின் பணியானது வரன்முறை செய்யப்படாததால், தனியரின் விண்ணப்பம் ஏற்கப்படவில்லை. பின்னர், இறந்த அரசு ஊழியரின் தற்காலிக பணியானது மேலே குறிப்பிடப்பட்ட அரசாணை மூலம் வரன்முறை படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் தனது 15.02.2017, 19.07.2017 மற்றும் 15.12.2017 நாளிட்ட கடிதங்களில் தனக்கு கருணை அடிப்படையில் பணி கோரி விண்ணப்பித்துள்ளார். அதனைத் தொடந்து, பார்வை 4-இல் காணும் அரசாணையில் தனியருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க விதித்தளர்வு செய்து அனுமதி அளிக்கப்பட்டது.

3) தனியர் திரு.பொ.கிரிதரன் அவர்களின் பிறந்த தேதி 13.02.1990 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19500 – 71900/- நிலை-8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரியில் 22.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

4) எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.பொ.கிரிதரன் என்பவரின் பணியினை, பார்வை 1, 2, 3, 8 மற்றும் 9-இல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின் அடிப்படையில், அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 22.09.2021 முற்பகல் முதல், அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து, செயல்முறை ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியருக்கு முதலாம் ஆண்டுக்கான ஊதிய உயர்வு / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மரு.ஜெ.சங்குமணி
மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர்

பெறுநர்

1. திரு.பொ.கிரிதரன்,
   இளநிலை உதவியாளர்,
   அரசு தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி, தூத்துக்குடி.

   – உரிய வழியாக.

2. முதல்வர், அரசு தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி, தூத்துக்குடி.
3. மாநில கணக்காயர், சென்னை -600 018.
4. மாவட்ட கருவூல அலுவலர், தூத்துக்குடி.

**நகல்:**

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை-06.

உதிரி / இருப்பு கோப்பு.

**//உண்மை நகல் / அனுப்பபடுகிறது//**

19/3/24

**மேலாளர்**

19/3/24